www.Padasalai.Net www.TrbTnpsc.com

9

Register No.

# காலாண்டுத் தேர்வு – 2024

நேரம் : 2.30 மணி

## தமிழ்

மதிப்பெண்கள் : 100

I. அனைத்து வினாக்களுக்கும் விடையளி. கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் சரியான விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும் 15x1=15

1. தமிழ்விடு தூது ……… என்னும் இலக்கிய வகையைச் சேர்ந்தது.
   அ) தனிப்பாடல் ஆ) தொடர்நிலைச் செய்யுள் இ) புதுக்கவிதை ஈ) சிற்றிலக்கியம்
2. நீர் நிலைகளோடு தொடர்பில்லாதது எது?
   அ) ஆறு ஆ) புலரி இ) இலஞ்சி ஈ) அகழி
3. விடுபட்ட இடத்திற்குப் பொருத்தமான விடை வரிசையைக் குறிப்பிடுக.
   க) ………. இனம் ங) வண்ணம் …………… ச) …….. குணம் ஞ) வனப்பு
   அ) மூன்று, நூறு, எட்டு, பத்து ஆ) மூன்று,நூறு, பத்து, எட்டு
   இ) பத்து, நூறு, எட்டு, மூன்று ஈ) நூறு, பத்து, எட்டு, மூன்று
4. மல்லல் மூதூர் வயவேந்தே - கோடிட்ட சொல்லின் பொருள் என்ன?
   அ) மறுமை ஆ) பூவரசு மரம் இ) பெரிய ஈ) வளம்
5. தீரா இடும்பை தருவது எது?
   அ) ஆராயாமை, ஐயப்படுதல் ஆ) குணம், குற்றம் இ) பெருமை, சிறுமை ஈ) நாடாமை, பேணாமை
6. பொருந்தாத இணை எது?
   அ) ஏறுகோள்-எருதுகட்டி ஆ) திருவாரூர்-கரிக்கையூர்
   இ) ஆதிச்சநல்லூர்-அரிக்கமேடு ஈ) பட்டிமன்றம்-பட்டிமண்டபம்
7. ஐம்பெருங்குழு, எண்பேராயம்-சொற்றொடர்கள் உணர்த்தும் இலக்கணம்
   அ) திசைச்சொற்கள் ஆ) வடசொற்கள் இ) உரிச்சொற்கள் ஈ) தொகைச்சொற்கள்
8. விடை வரிசையைத் தேர்க.
   (க) இது செயற்கைக்கோள் ஏவு ஊர்தியின் செயல்பாட்டை முன் கூட்டியே கணிக்கும்
   (ங) இது கடல் பயணத்துக்காக உருவாக்கப்பட்ட செயலி
   அ) நேவிக், சித்தாரா ஆ) நேவிக், வானூர்தி இ) வானூர்தி, சித்தாரா ஈ) சித்தாரா, நேவிக்
9. தமிழ்நாடு அரசு கிராமப்புற மாணவர்களுக்கு நடத்தும் திறனாய்வுத் தேர்வு எது?
   அ) தேசியத் திறனறித் தேர்வு ஆ) ஊரகத் திறனறித் தேர்வு
   இ) தேசியத் திறனறி, கல்வி உதவித் தொகைத்தேர்வு ஈ) மூன்றும் சரி
10. தமிழரின் நாகரிகத்தை உணர்த்தும் விளையாட்டு…………. அ) கபடி ஆ) ஏறு தழுவுதல் இ) சிலம்பம் ஈ) மல்யுத்தம்
11. திராவிட மொழிகள் மொத்தம் ………… எனக் கூறுவர்.
    அ) 16 ஆ) 28 இ) 12 ஈ) 21

பாடலைப் படித்துப் பின்வரும் வினாக்களுக்கு (12,13,14,15) விடை தருக.

நீர்இன்று அமையா யாக்கைக்கு எல்லாம்
உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே!
உண்டி முதற்றே உணவின் பிண்டம்
உணவெனப் படுவது நிலத்தொடு நீரே;
நீரும் நிலமும் புணரியோர், ஈண்டு
உடம்பும் உயிரும் படைத்திசினோரே!



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

12. இப்பாடல் இடம்பெற்ற நூல் எது?

அ) பெரியபுராணம் ஆ) புறநானூறு இ) கலித்தொகை ஈ) தொல்காப்பியம்

13. இப்பாடலின் ஆசிரியர் யார் ?

அ) கம்பர் ஆ) குடபுலவியனார் இ) சேக்கிழார் ஈ) சீத்தலைச் சாத்தனார்

14. 'யாக்கை' என்பதன் பொருள் .............

அ) உணவு ஆ) உடல் இ) உயிர் ஈ) உலகம்

15. நீரும் நிலமும், உயிரும் உடம்பும் என்பவை ...........

அ) உம்மைத் தொகைகள் ஆ) எண்ணும்மைகள் இ) வேற்றுமைகள் ஈ) வினைத்தொகைகள்

**II. எவையேனும் நான்கு வினாக்களுக்கு விடையளிக்கவும். (21ஆவது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்கவும்) 4x2=8**

16. 'கண்ணி' என்பதன் விளக்கம் யாது?

17. நிலையான வானத்தில் தோன்றி மறையும் காட்சிக்குப் பெரியபுராணம் எதனை ஒப்பிடுகிறது?

18. ஏறு தழுவுதல் நிகழ்விற்கு இலக்கியங்கள் காட்டும் வேறு பெயர்களைக் குறிப்பிடுக.

19. இணைய வழியில் இயங்கும் மின்னணு இயந்திரங்கள் எவையேனும் நான்கினைக் குறிப்பிடுக.

20. விடைகளுக்கேற்ற வினாக்கள் அமைக்கவும் (அ) தமிழகத்தின் தொன்மையான நகரம் மதுரை

ஆ) மனித வாழ்வின் அடிப்படைத் தேவைகள் உணவு, உடை, உறைவிடம்

21. 'எனைத்தானும்' எனத் தொடங்கும் திருக்குறளை எழுதுக.

**III. எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும் 5x2=10**

22. வீணையோடு வந்தாள், கிளியே பேசு - தொடரின் வகையைச் சுட்டுக.

23. வல்லினம் மிகா இடம் ஒன்றைச் சான்றுடன் எழுதுக.

24. கீழ்க்காணும் மரபு இணைச்சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக.

அ) கண்ணும், கருத்தும் (ஆ)மேடும், பள்ளமும்

25. கலைச்சொற்களை எழுதுக (அ) Water Management (ஆ) Download

26. பகுபத உறுப்பிலக்கணம் தருக: விரித்த,

27. பொருத்தமான பெயரடைகளை எழுதுக. (நல்ல, பெரிய, இனிய, கொடிய)

அ) எல்லோருக்கும் ........... வணக்கம். ஆ) ........... விலங்கிடம் பழகாதே.

28. கீழ்க்காணும் தொடரைப் பழமொழிகொண்டு நிறைவு செய்க.

அ) இளமையில் கல்வி ................. (ஆ) கற்றோர்க்குச் சென்ற .................

**IV. எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளி 2x3=6**

29. காலந்தோறும் தமிழ்மொழி தன்னை எவ்வாறு புதுப்பித்துக் கொள்கிறது?

30. வேளாண் உற்பத்தியின் பண்பாட்டு அடையாள நீட்சியை விளக்குக.

31. உரைப் பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.

விக்ரம் சாராபாய் 'இந்திய விண்வெளித் திட்டத்தின் தந்தை' என்று அழைக்கப்படுகிறார்; ஆரியப்பட்டா என்ற முதல் செயற்கைக்கோள் ஏவுதலுக்குக் காரணமானவர். இந்தியாவில் செயற்கைக்கோள் உதவியுடன் தொலைக்காட்சி வழியாக 24,000 கிராமங்களில் உள்ள ஐம்பது இலட்சம் மக்களுக்குக் கல்வியை எடுத்துச் செல்ல உதவினார். இவரின் பெயரால் 'விக்ரம் சாராபாய் விண்வெளி மையம்' திருவனந்தபுரத்தில் செயல்பட்டு வருகிறது.

வினாக்கள்

1. விக்ரம் சாராபாய் விண்வெளி மையம் எங்கு செயல்பட்டு வருகிறது?
2. இந்திய விண்வெளித் திட்டத்தின் தந்தை என்று அழைக்கப்படுபவர் யார்?
3. இந்தியாவின் முதல் செயற்கைக்கோள் எது?



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

**V. எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளி. (34வது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்கவும்) 2x3=6**

32. பட்ட மரத்தின் வருத்தங்கள் யாவை?

33. அறிவையும் உயிரினங்களையும் தொல்காப்பியர் எவ்வாறு தொடர்புபடுத்துகிறார்?

34. அடிபிறழாமல் எழுதுக. 'தித்திக்கும் தெள்ளமுதாய்த்' - எனத் தொடங்கும் தமிழ்விடுதூது பாடலின் முதல் நான்கு அடிகளை எழுதுக. (அல்லது) 'காடெல்லாம் கழைக்கரும்பு' - எனத் தொடங்கும் பெரியபுராணப் பாடலை எழுதுக.

**VI. எவையேனும் இரண்டு வினாவிற்கு விடையளி 2x3=6**

35. தன்வினை, பிறவினை எடுத்துக்காட்டுகளுடன் வேறுபடுத்திக் காட்டுக.

36. வல்லினம் இட்டும் நீக்கியும் எழுதுவதன் இன்றியமையாமையை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

37. பொருத்தமான துணை வினைகளைப் பயன்படுத்தி எழுதுக.

1) மனிதனையும் விலங்குகளையும் ........... (வேறு) மொழியாகும்.

2) திராவிட மொழிகள் சில பொதுப் பண்புகளைப் (பெறு) ..........

3) காலந்தோறும் தன்னைப் ......... (புதுப்பித்து) மொழி தமிழ்.

**VII. அனைத்து வினாக்களுக்கும் விடையளி 5x5=25**

38. அ) பெரியபுராணம் காட்டும் திரு நாட்டுச் சிறப்பினைத் தொகுத்து எழுதுக.

(அல்லது)


ஆ) உங்கள் ஊரில் நடைபெறுகின்ற விழா முன்னேற்பாடுகளை இந்திரவிழா நிகழ்வுகளுடன் ஒப்பிடுக.

39. அ) உங்கள் நண்பர், பிறந்தநாள் பரிசாக அனுப்பிய எழுத்தாளர் எஸ். இராமகிருஷ்ணனின் 'கால் முளைத்த கதைகள்' என்னும் நூல் குறித்த கருத்துகளைக் கடிதமாக எழுதுக

(அல்லது)

ஆ) சுற்றுச்சூழலைப் பேணிக்காக்கும் பள்ளிகளின் வரிசையில் மாவட்டத்திலேயே சிறந்ததாக உங்கள் பள்ளி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. அதனைக் கொண்டாடும் விழாவில் கலந்து கொள்ளும் மாவட்டக் கல்வி அலுவலருக்கு வரவேற்பு மடல் ஒன்றை எழுதுக.

40. காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.



41. பாநயம் பாராட்டுக.

கல்லும் மலையும் குதித்து வந்தேன்-பெரு
ங்காடும் செடியும் கடந்து வந்தேன்
எல்லை விரிந்த சமவெளி - எங்கும் நான்
இறங்கித் தவழ்ந்து தவழ்ந்து வந்தேன்
ஏறாத மேடுகள் ஏறி வந்தேன் - பல
ஏரி குளங்கள் நிரப்பி வந்தேன்
ஊறாத ஊற்றிலும் உட்புகுந்தேன் - மணல்
ஓடைகள் பொங்கிட ஓடி வந்தேன் - கவிமணி

42. அ) நீ பாராட்டுப்பெற்ற சூழல்கள் ஏதேனும் ஐந்தினை எழுதுக.

(அல்லது)



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com

ஆ) மொழிபெயர்க்க :

1) A Nation's culture resides in the hearts and in the soul of its people - Mahatma Gandhi

2) The art of people is a true mirror to their minds - Jawaharlal Nehru

3) The biggest problem is the lack of love and charity - Mother Teresa

4) You have to dream before your dreams can come true - A.P.J.Abdul Kalam

5) Winners don't do different things they do things differently - Shiv Khera

**VIII. அனைத்து வினாக்களுக்கும் விரிவான விடையளிக்கவும்** **3x8=24**

43. அ) திராவிட மொழிகளின் ஒப்பியல் ஆய்விற்குத் தமிழே பெருந்துணையாக இருக்கிறது என்பதை எடுத்துக்காட்டுகளுடன் விவரிக்க

(அல்லது)

ஆ) ஏறுதழுவுதல் தமிழரின் அறச்செயல் என்று போற்றப்படுவதற்கான காரணங்களை விவரிக்க.

44. அ) 'தண்ணீர்' கதையைக் கருப்பொருள் குன்றாமல் சுருக்கித் தருக

(அல்லது)

ஆ) இந்திய விண்வெளித்துறை பற்றிய செய்திகளை விவரி.

45. அ) பள்ளியில் நடைபெற்ற இலக்கியமன்ற விழா நிகழ்ச்சி செய்திகளைத் திரட்டித் தொகுப்புரை உருவாக்குக

(அல்லது)

(ஆ) 'சுற்றுச்சூழல் பாதுகாப்பு' என்னும் தலைப்பில் கட்டுரை எழுதுக.

☆☆☆☆

Padasalai.Net



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com